DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.73/2024

| | | | |
|---|---|---|---|
| அ.சா . | : 13 | நாள் | : 06.11.2025 |
| பெயர் | : செந்தில்குமார் | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 06th day of November 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை

நான் தற்போது மாவலியூத்து கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நெசவு தொழில் செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். நான் வெளிநாடு செல்வதற்கு எதிரிகளிடம் பணம் கொடுத்தேன். எதிரிகள் வெளிநாட்டில் வேலை ஏற்பாடு செய்து தருவதாக சொன்னார்கள். எங்கள் ஊரில் வெளிநாட்டில் வேலைக்கு அனுப்புவதாக துண்டு பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தது. அதனடிப்படையில் கரிவலம்வந்தநல்லூரில் உள்ள பயாட் நிறுவனத்திற்கு சென்று விசாரித்தபோது கனடாவில் வேலை வாங்கித் தருவதாக சொன்னார்கள். ரூ.60,000/- பணம் செலுத்த வேண்டுமென்று சொன்னார்கள். பாஸ்போர்ட்டும் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். 2013 ம் ஆண்டு இறுதியில் நிறுவனத்தில் பணம் செலுத்தினேன்.

அதன்பின்னர் ஒரு மாதம் , 15 நாட்கள் இடைவெளியில் நான்கு ஐந்து முறை அந்த நிறுவனம் சென்று விசாரித்தேன். நான் கடைசியாக சென்றபோது அந்த அலுவலகம் பூட்டிக் கிடந்தது. நான் அருகில் இருந்தவர்களை விசாரித்தபோது போலீசார் வந்து அவர்களை அழைத்துச் சென்றுவிட்டதாகவும், ஆவணங்களை எடுத்துச் சென்றுவிட்டதாகவும் கூறினார்கள். அதன்பின்னர் ஒரு நான்கு ஐந்து நாட்கள் கழித்து சங்கரன்கோவில் போலீசார் என்னை விசாரித்தார்கள். வழக்கு விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்று சொன்னார்கள். என்னுடைய கடவுச் சீட்டு அ.சா.ஆ.4 ஆகும்.

**1ம் எதிரி தரப்பில் கு.வி.**

நான் 8ம் வகுப்பு வரை படித்தேன். அந்த பயாட் நிறுவனம் காவலர்களுக்கு பயிற்சியளிக்கும் நிறுவனம் ஆகும். நான் செல்லும்போது அங்கு ஆசிரியர்களும் மாணவர்களும் இருந்தார்கள். நான் எங்கள் ஊரில் இருந்தவர்களை விசாரித்து கரிவலம்வந்தநல்லூருக்கு சென்றேன் அவர்கள் யார் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. நான் 1வது எதிரி கங்காதரனை பார்த்துள்ளேன். வெளிநாட்டிற்கு செல்வதற்கு என்னிடம் எதிரிகள் பணம் கேட்டதாக கூறுவதும் நான் பணம் செலுத்தியதாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. பயாட் நிறுவனம் பயிற்சி பள்ளி நிறுவனம் என்றும் வெளிநாட்டிற்கு வேலைக்கு அனுப்புவதாக நான் கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுக்கவில்லை. முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களைத்தான் போலீசார்

விசாரித்தபோதும் கூறினேன். போட்டி பயிற்சி பள்ளி நிறுவனத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட பொய்புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் 1ம் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**2 ம் எதிரி தரப்பில் கு.வி. இல்லை**

**3 ம் எதிரி தரப்பில் கு.வி.**

என்னை சங்கரன்கோவில் போலீசார் விசாரித்தார்கள் எத்தனை மணிக்கு எங்கு வைத்து விசாரித்தார்கள் என்று ஞாபகமில்லை. நான் எதிரிகளிடம் பணம் கொடுத்ததும் அவர்கள் வாங்கியதும் என்னையும் எதிரியையும் தவிர வேறு யாருக்கும் தெரியாது. நான் பணம் கொடுத்த விவரம் என் பக்கத்து வீட்டுக்காரர்களிடம் மட்டும்தான் சொன்னேன். காவல் துறையினரிடமோ வேறு அரசு அலுவலரிடமோ கூறவில்லை. நான் பயாட் நிறுவனம் செல்லும் முன்னதாகவோ பின்னதாகவோ எதிரிகளை தனிப்பட்ட முறையில் தெரியாது. காவல் துறையினர் கேட்டுக் கொண்டதன்பேரில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.11.06 15:27:48 +0530